தமிழ் நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1974 ஏப்ரல் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அரசினர் தீர்மானம்

வினா நேரத்தைத் தள்ளிவைத்தல்

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவை 22-ஆம் விதியின் கீழ் முதல் ஒரு மணி நேரம் " வினாக்கள்—விடைகள் " என்று உள்ளதை இன்று தள்ளிவைத்து, நிகழ்ச்சி நிரலில் அடுத்துள்ள " அரசினர் சட்ட முன்வடிவு " என்பதை எடுத்துக் கொள்ளவேண்டும்"

என்று நான் முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைய பட்டியலில் உள்ள வினாக்கள் 8—4—1974 திங்கட்கிழமை அன்று எடுத்துக் கொள்ளப்படும்.

2. அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, இந்து சமய—அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, இந்து சமய—அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]